பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(22-6-2016)* புதன்கிழமை காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாடு) ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து 7-3-2016 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/புகொக/19-4-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(2) 4-3-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட II (2)/SE/128(c-1)/2010 ஆம் எண் அறிவிக்கைக்கு பிழைத்திருத்தம் செய்தது குறித்து பள்ளிக் கல்வித் (வரவு செலவு-I) துறையின் 6-10-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 162-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டத்தின் (தமிழ்சாடு சட்டம் 8/2010) 17(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-